
பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 06 திங்கட்கிழமை 20.06.2022 கதிர் 118

## கோட்டாவுக்கு இன்று 73ஆவது பிறந்தநாள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 73 ஆவது பிறந்த நாள் இன்றாகும். அதையொட்டி சில இடங்களில் விசேட மத அனுஷ்டானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் ☞2



# ஜனாதிபதி செயலகம் அருகே பதற்றம்; படையினர் குவிப்பு!

## போராட்டக்காரர்கள் பலர் கைது

கொழும்பு - காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம் அருகே இன்று காலை முதல் பதற்றமான நிலைமை உருவாகியுள்ளது. அங்கு பாதுகாப்புப் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லும் அனைத்து நுழைவாயில்களையும் மூடி போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி 'கோட்டா கோ கம'வில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் இன்று 73 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்நிலையில், போராட்டக் குழுவினர், ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லும் அனைத்து நுழைவாயில்களையும் மூடி ஆர்ப்பாட்டம் நடத்தும் நிலையிலேயே அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது. ☞2

## கள்ளர் கூட்டத்துடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயார் இல்லை

### சஜித் மீண்டும் திட்டவட்டம்



ஆட்சியைப் பொறுப்பேற்குமாறு சிலர் கேட்டபோது, ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது நானோ பொறுப்புகளை ஒரு போதும் தட்டிக்கழிக்கவில்லை. நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்ற 'மொட்டு' கள்ளர் கூட்டம் மற்றும் ராஜபக்ஷக்களுடன் இணைந்து அரசை அமைக்க முடியாது என்றே அன்று தொடக்கம் இன்று வரைக்கும் கூறி வருகின்றோம். ☞2

## இன்று கூடுகிறது அமைச்சரவை; '21' இற்கு அனுமதி கிடைக்குமாம்

### நீதி அமைச்சர் கூறுகின்றார்



சர்வகட்சி அரசு எனப் பெயரிடப்பட்டுள்ள தற்போதைய அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை நடைபெறவுள்ளது. ☞2

## கோட்டாவை வீட்டுக்கு விரட்டும் தொடர் போராட்டத்தில் எதிரணி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி ஒரு வார காலம் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இன்றிலிருந்து இப்போராட்டம் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## அனைவரும் பொறுமையாக இருந்தால் தீர்வைப் பெற்றுக்கொடுப்பாராம் ரணில்

### இப்படி நம்புகின்றார் வஜிர



நாட்டில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்குப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உரப் பிரச்சினை இதுவரை வெற்றிகரமாக ☞2

## புத்தளத்தில் அடாவடியில் ஈடுபட்ட நிஷாந்த எம்.பியின் சகோதரர் கைது



புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையவளாகத்தில் அடாவடியில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2



## பங்கீட்டு அட்டைக்கே யாழில் எரிபொருள் மாவட்ட செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்குப் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட சில முக்கிய தீர்மானங்கள் இன்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டது.

இதன்போது,

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் ☞2

## 5 ஆயிரம் ரூபாவுக்காக வயோதிபர் படுகொலை



இருவர் கைது

யாழ்ப்பாணம், கீரிமலையில் வீடொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிபர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் ☞2

## புத்தளத்தில் அடாவடியில் ஈடுபட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் சகோதரரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பகுதியில் உள்ள எரி பொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் வைத்து அண் மையில் அவர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியிருந்தார். பொலிஸாரின் கடமைக்கு இடையூறும் விளைவித்திருந்தார். இந்நிலையிலேயே அவர் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பங்கீட்டு அட்டைக்கே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிரப்பு நிலையங்கள் தத்தம் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் செயற்படுவதுடன் நாளாந்த கையிருப்புத் தகவல்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தினமும் காலை, இரவு என இரண்டு தடவைகள் நேரடியாகச் சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இணங்கியுள்ளது.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றது. அதன்படி மக்கள் தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளைப் பெறும் வகையில் பொறிமுறை உருவாக்கப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தைத் தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அரச உத்தியோகத்தர்கள் திணைக்களத் தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சுகாதார சேவையினருக்கான எரிபொருள் விநியோகத்துக்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளை வழங்கும் – என்று தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், யாழ். மாவட்ட செயலர் க. மகேசன், மேலதிக அரச அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

## 5 ஆயிரம் ரூபாவுக்காக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர் .

வயோதிபரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 42 மற்றும் 62 வயதுடைய சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

கீரிமலை, புதிய கொலனியில் வசிக்கும் ச. நடராசா ( வயது 63 ) என்பவரே கொலைசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த வயோதிபர் வீட்டில் நினைவிழந்திருந்த நிலையில் காணப்பட்டதையடுத்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் . மருத்துவ பரிசோதனையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அறிக்கையிடப்பட்டது .

வயோதிபரின் கழுத்து நெரிக்கப்பட்டதால் ஏற்பட்ட மூச்சுத்திணறலினால் அவர் உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தொடர்பாக எழுந்த முரண்பாடு ஒன்றை அடுத்தே இந்தக் கொலை நடந்துள்ளது என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று காங்கேசன்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கோட்டாவை வீட்டுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைத்துத் தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்று, ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அனைவரும் பொறுமை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஆகையினால், அனைவரும் பதற்றமடையாமல் பொறுமையாக இருந்தால், எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்கும் பிரதமரால் தீர்வு காண முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கள்ளர் கூட்டத்துடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

இது தொடர்பில் ஊடகங்கள் முன்னிலையில் அவர் மேலும் கூறுகையில்,

இன்று இந்த நாட்டு மக்களுக்கு இந்த அரசு மீது ஒரு துளியளவும் நம்பிக்கை இல்லை. இவ்வாறான குழுக்களுடன் இணைந்து ஆட்சியமைப்பதன் மூலம் இந்த நாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்?

இந்த நாடு தொடர்ந்தும் மூடிய தன்மையுள்ள ஒரு நாடாக இருக்க முடியாது. உலக நாடுகளுடன் தொடர்புகளைப் பேணும், உலக நாடுகளுக்கு நமது நாட்டை அனுகுவதற்கு ஏற்ற திறந்த தன்மை மற்றும் உலக நாடுகளுடன் நட்புறவுகளைப் பேணும் நாடாக மாற வேண்டும்.

வீதிகளில் வரிசையில் நிற்கும் மக்களுக்கு, பாடசாலையைத் தவறவிட்டு வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு, எதிர்காலம் குறித்து விரக்தியடைந்துள்ள இளைஞர்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசிடம் தீர்வோ அல்லது அதற்கான ஒரு வேலைத்திட்டமோ இல்லை.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இந்தத் துன்பங்களை தாங்கிக்கொள்ளுமாறே மக்களிடம் கேட்டுக்கொள்கின்றனர்.

குறைபாடுகள் மற்றும் இயலாமைகள் குறித்துக் கூறும் அரசு என்ற ஒன்று தேவையில்லை. ஒரு புதிய மக்கள் ஆணையைத் தாண்டி இந்தக் கடுமையான நெருக்கடிக்கு தீர்வு.

இன்றைய நாட்டின் தலைவிதிக்குப் போலியான தேசப்பற்றும் ஒரு காரணமாகும். நாட்டின் உற்பத்தித் தொழில் துறைகளை மேம்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்குப் பார்வை – என்றார்.

## இன்று கூடுகிறது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கவுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர், ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

21 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் இழுபறி நிலையில் உள்ள சரத்துகள் தொடர்பில் இதன்போது இறுதி முடிவு எடுக்கப்பட்டு, சட்டமூலத்துக்கு 'மொட்டு' கட்சியின் இணக்கப்பாடு பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்கு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவு அவசியம். எனினும், 21 இல் உள்ள சில சரத்துகளுக்கு அக்கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்நிலையிலேயே சர்ச்சைகளுக்கு முடிவு கட்ட இன்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின்போதே, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் 21 ஆவது திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், கட்சிகளின் ஆலோசனைகளை, திருத்தங்களை உள்வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டு, இரு தடவைகள் சர்வகட்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

அதன்பின்னர் திருத்தப்பட்ட 21 ஆவது திருத்தச் சட்டமூலம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. உள்ளடக்கங்கள் தொடர்பில் கலந்துரையாட கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்நிலையிலேயே இது விடயம் சம்பந்தமாக இன்று இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வகிப்பதற்கும், நாடாளுமன்ற அனுமதியுடன் பிரதமரைப் பதவி நீக்குவதற்கும் 21இல் இடமளிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அமைச்சரவை அனுமதியின் பின்னர், சட்டமா அதிபரின் சான்றுரை கிடைக்கப் பெற்ற பின்னர் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதன்போதே உள்ளடக்கங்கள் தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெறக்கூடியதாக இருக்கும்.

வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனைச் சவாலுக்குட்படுத்த 7 நாள்கள் அவகாசம் வழங்கப்படும். இக்காலப்பகுதியில் உயர்நீதிமன்றத்தை நாடலாம்.

உயர்நீதிமன்றத்தில் சட்ட விளக்கம், யோசனைகள் என்பன மூன்று வாரங்களுக்குள் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் சட்டமூலம் தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டு, சட்டம் இயற்றும் பணி இடம்பெறும்.

## ஜனாதிபதி செயலகம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று 73ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் நிலையில், இன்று தமது போராட்டமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்குள் செல்லும் அனைத்துப் பாதைகளையும் மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அங்கு பொலிஸாருடன் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் எனப் பெருந்திரளான பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதி அமைச்சுக்குச் செல்லும் நுழைவாயில்களை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பௌத்த பிக்கு ஒருவரும், நான்கு பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் பொலிஸாரின் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் மற்றும் வீதியில் போக்குவரத்துகளுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையிலும் நடந்துகொண்டனர் எனவும், இதனால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கோட்டாவுக்கு இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவை அமைச்சரான டி.ஏ.ராஜபக்ஷவின் புதல்வரும் இலங்கையின் 5ஆவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ 1949ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி பிறந்தார்.

அவர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கல்வி கற்றதோடு, 1971 இல் இலங்கை இராணுவத்தில் இணைந்தார். தனது இராணுவ சேவையின்போது அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புக் கற்கைகளில் முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றதோடு பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் உயர்தரப் பயிற்சிகள் பெற்றார்.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் பல எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆணையிட்டு நடத்தினார்.

1991இல் லெப்டினன் கேர்ணலாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயின்று அதன்பின்னர் ஐக்கிய அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தார். அங்கு கலிபோர்னிய, லொயலா சட்டக் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப தொழில் வாண்மையாளராகப் பணியாற்றி 2005இல் இலங்கைக்குத் திரும்பினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மக்களோடு ஊடாடுங்கள்!

**கோட்டா – ரணில் ஆட்சிப் பீடம் நாட்டின் கள நிலைமையின் விபரீதத்தை கச்சிதமாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.**

**நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளின் ஆழத்தை – அதன் அர்த்த பரிமாணத்தை – ஆட்சித் தலைமை இன்னும் சரிவர உள்வாங்கிக் கொள்ளவில்லை என்றுதான் படுகின்றது.**

**மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை விடயங்களை அணுகுவதில் ஆட்சித்தலைவர்கள் காட்டும் மெத்தனப் போக்கு – விட்டேத்தியான அணுகுமுறை – அவர்கள் மக்கள் சீற்றத்தின், ரௌத்திரத்தின் தீவிரத்தை இன்னும் சரியாக உணரவில்லை என்ற முடிவைத்தான் தந்து நிற்கின்றன.**

**இன்றைய இக்கட்டு தொடர்பில் மக்களைப் புரிந்து கொள்வதில் அரசியல் தலைமை ஈடுபாடு காட்டவில்லை, கவனித்துச் செயற்படவில்லை என்பதே மோசமான நிலைமை உருவாகுவதற்கு அடிப்படையாகப் போகின்றது.**

**இதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சுட்டிக்காட்டியுள்ளது.**

**இலங்கையின் சரித்திரத்தில் முன்னெப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பட்டினிச் சாவை நோக்கி நாடு நகரும், போது மக்கள் பெரும் வயிற்றுப் பசியுடனும், சகிப்புத் தன்மையுடனும் அடங்கி விடுவர் என்று அரசுத் தலைவர்கள் கருதுவார்களேயானால் அவர்களைப்போல அறிவற்றவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.**

**வீட்டில் பச்சைக் குழந்தைகள், வயதான பெற்றோர்கள், மூத்தோர் நாட்டின் மோசமான நிர்வாகத்தினால் பட்டினி கிடக்கும்போது, குடும்பத் தலைவனும், குடும்பத்தின் இள இரத்தங்களும் இது எங்கள் தலையெழுத்து என்று அடங்கிக் கிடக்க மாட்டார்கள். அப்படி அடங்கிக் கிடக்க அவர்கள் ஒன்றும் ஞானிகளோ அல்லது முற்றும் துறந்த முனிவர்கள் அல்லர். சராசரி மனிதர்கள். வீட்டிலிருக்கும் குடும்பத்தாருக்கு ஒரு வேளை உணவு கொடுக்க முடியவில்லை, எரிபொருள் இல்லாமையால் நடமாட முடியவில்லை, எரிவாயு இல்லாமல் சமைக்கக் கூட இயலவில்லை என்ற இயலாமை – ஆற்றாமை – ஒரு சராசரி மனிதனை விபரீதமாக – விசித்திரமாக – வினோதமாக – ஏன், விரோதமாகவும் கூட – சிந்திக்கவும் செயல்படவும் தூண்டும்.**

**இது, இன்றைய நிலைமை, இந்த நெருக்கடியின் ஆரம்ப கட்டம்தான். போகப்போக ஏற்படப்போகும் நெருக்கடியின் தீவிரம் விபரீதமான மன எண்ணங்களை மக்கள் மத்தியில் – அவர்கள் மனதில் – தூண்டக்கூடிய ஆபத்து ஏது நிலைகள் உள்ளன. இது மனோதத்துவ ரீதியிலும் சமூக கண்ணோட்டத்திலும் கூர்ந்து அவதானித்துக் கையாளப்பட வேண்டிய அவசர, அவசிய விவகாரம்.**

**மக்களின் ஆற்றாமையை – ஆதங்கங்களை – விரக்தியை – ஏமாற்றங்களை – புரிந்து கொள்ளுங்கள், யதார்த்த நிலைமையை வெளிப்படையாக மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோருவது இதைத்தான்.**

**மக்களுக்குரிய அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய தகுதி நிலையில் கூட இந்த அரசு இல்லை. ஆயினும் அந்தக் கையறு நிலை குறித்து மக்களுடன் வந்து பேசுங்கள், அவர்களுடன் ஊடாடுங்கள். அவர்களின் மனதைத் தட்டி அவர்களோடு கலந்துரையாடுங்கள்.**

**அதை விடுத்து அதிகாரம் கையில் இருக்கின்றது என்ற மமதையில், இவ்வளவுக்குப் பின்னரும், அகங்காரத் திமிர் போக்கை – எதேச்சதிகார அணுகுமுறையை – தொடர்வீர்களானால் நிலைமை நிச்சயம் மோசமாகும்.**

**உள்ளே கனன்று கொண்டு, வெளியில் அடங்கிக் கிடக்கும் எரிமலை போன்ற ஒரு மக்கள் கூட்டத்தின் மீதுதான் உங்கள் ஆட்சி அதிகாரம் தொடர்கிறது என்பதை அரசுத் தரப்பினர் – அரசுத் தலைமை – மறந்து விடக்கூடாது. எரிமலையைச் சீண்டி, தூண்டி, பீறி எழ வைத்தால் பேரழிவு தவிர்க்க முடியாததாகும்.**

# யாழில் குடும்பப் பங்கீட்டு அட்டைக்கே ஜூலை 1 முதல் எரிபொருள் விநியோகம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன்20

யாழ் மாவட்டத்தில் ஜூலை முதலாம் திகதி முதல் குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்புநிலையங்களில் மட்டுமே எரிபொருளினை பெற்றுக்கொள்ள முடியும் என மாவட்டச் செயலகத்தில் இன்றைய தினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள எரிபொருள் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் யாழ் மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் ஆராயப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பிரதேச செயலர்கள் மற்றும் வடக்கு பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் போது பல தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் அவை அமைந்துள்ள பிரதேச செயலகங்களின் பொறுப்பில் செயற்படும் என முடிவு செய்யப்பட்டது.

நாளாந்தக் கையிருப்புத் தகவல்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நேரடியாக சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்த CEYPETCO தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை அறிமுகமாகிறது. அவை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றது. அதன்படி மக்கள் தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளை பெறும் வகையில் பொறிமுறை உருவாக்கப்படும்.

சுகாதார சேவையினருக்கான எரிபொருள் விநியோகத்துக்கு தனியான ஏற்பாடுகள் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தை தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் திணைக்கள தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொருபிரதேசசெயலகஎல்லைகளுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளை வழங்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

# கியூவில் இடம்பெற்ற சாவுகள் நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை



எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு வரிசைகளில் காத்திருந்தவர்களுள் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு வரிசைகளில் நின்று உயிரிழந்த குடும்பங்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்க வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, அவர்களுக்கான நட்டஈட்டை வழங்காவிடின், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதாக ஐக்கிய தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

# ஐந்து கோடி அவுஸ் டொலர் அந் நாட்டிடமிருந்து உதவி

இலங்கைக்கு ஐந்து கோடி ஆஸ்திரேலிய டொலர் (சுமார் ஆயிரத்து 250 கோடி ரூபா) நிதி உதவி வழங்கவுள்ளதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவசரகால உணவு மற்றும் மருந்துப் பாவனைக்காக இந்த நிதித்தொகை வழங்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

உணவு, மருந்து மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்த நிதி உதவியில், 2 கோடி இருபது லட்சம் ஆஸ்திரேலிய டொலர்கள் உலக உணவுத் திட்டத்திற்காகவும் முப்பது லட்சம் ஆஸ்திரேலிய டொலர்கள் மக்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய செலவிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

2022 - 23 க்குள் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மேலும் 2 கோடி முப்பது லட்சம் ஆஸ்திரேலிய டொலர்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்காக எரிபொருள் நிலையங்களை ஒதுக்க முடிவு!

அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்காக எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிலையங்களை வெள்ளிக்கிழமைகளில் ஒதுக்குவதற்கு எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார். எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பணியாளர்கள் பணிக்கு சமுகமளிக்க முடியாத காரணத்தால் வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகள் கூட தாமதமாக நடைபெறுகின்றன என சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இணைந்து கவலை தெரிவித்துள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எனவே, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அவசர சுகாதார சேவைகளுக்கு ஒதுக்கப்படும் வகையில், மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பரிந்துரைக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை சுகாதார ஊழியர்களுக்கும் பொது போக்குவரத்து மூலம் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 20.06.2022



# உக்ரைன் போர் எவ்வளவு காலம் நீடிக்கும் என கணிக்க முடியாது

## நேட்டோ பொதுச் செயலாளர் கருத்து

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24ம் திகதி ரஷ்யா தாக்குதலை தொடங்கியது. இந்த போர் தொடங்கி 5 மாதங்களை நெருங்கி விட்டது. ஆனாலும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. உக்ரைன் முக்கிய நகரங்களை ரஷ்யா கைப்பற்றிய போதும் மற்ற இடங்களை பிடிக்க கடுமையான சண்டை நடந்து வருகிறது. உக்ரைன் நாட்டுக்கு பல்வேறு நாடுகள் ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை செய்து வருகின்றன.

இந்த நிலையில் உக்ரைன் போர் மேலும் பல ஆண்டுகள் நீடிக்கும் என நேட்டோ பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டியில்கூறிஇருப்பதாவது:-

உக்ரைன் போர் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என கணிக்க முடியாது என தெரிவித்தார். மேலும் தெரிவித்தவை வருமாறு

இது பல ஆண்டுகள் கூட நீடிக்கலாம். எனவே அதற்கு ஏற்றாற் போல நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். உக்ரைன் போர் நீண்ட காலத்துக்கு நடைபெற்று வருவதால் நேட்டோ உறுப்பு நாடுகளும் நட்பு நாடுகளும் உக்ரைன் நாட்டுக்கு கொடுத்து வரும் ஆதரவை குறைத்து விடக்கூடாது.

இந்த போரால் ஐரோப்பிய நாடுகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படும் என்பது உண்மைதான். உக்ரைனுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கி வருவதாலும் உணவு பொருள்கள், எரிபொருள் விலை ஏற்றத்தால் ஐரோப்பிய நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்து வருகிறது.

இதற்காக ஐரோப்பிய நாடுகள் பின்வாங்க கூடாது. எவ்வளவு பொருளாதார இழப்பு ஏற்பட்டாலும் நட்பு நாடுகள் உக்ரைனை கைவிட்டு விடக்கூடாது. உக்ரைன் வீரர்கள் சந்தித்து வரும் இழப்புகளை ஒப்பிடுகையில் உணவு, எரிபொருள் விலை ஏற்றத்தால் ஏற்படும் இழப்பு மிகவும் சிறிது தான். இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

இந்த நிலையில் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி போர் நடைபெறும் பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அங்குள்ள கைக்கோனலஸ் மற்றும் ஓடேசாலி நகருக்கு சென்று அவர் போரால் சேதடைந்து கட்டடங்களை பார்வையிட்டார்.

# 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஸ்பெயினில் வாட்டி வதைக்கும் வெப்பம்



ஸ்பெயினில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஜூன் மாதம் கடும் வெப்பம் பதிவாகியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் தற்போது கடும் வெப்பநிலை பதிவாகி வருகிறது. அதாவது, பாரிஸ், பிரான்ஸ், ஸ்பெயின் மற்றும் பிற மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெப்ப அலையை எதிர்கொள்கின்றன. குறிப்பாக ஸ்பெயினில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் வெப்பம் பதிவாகியுள்ளது. சில பகுதிகளில் 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானதுடன் இரவு நேரங்களிலும் வெப்பநிலை வழக்கத்திற்கு மாறாக உள்ளது.

சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் குளிர்ச்சியான பகுதிகளை நோக்கி படையெடுத்து வருகின்றனர். தலைநகர் மாட்ரிட்டில் நீர்ஊற்றுகளில் குவிந்த மக்கள் தண்ணீரில் விளையாடியும், மரங்களின் நிழல்களில் படுத்து உறங்கியும் வெப்பத்தை தணித்து கொண்டு வருகின்றனர். அங்குள்ள கட்டடங்களை குளிர்விக்க தண்ணீர் தெளிக்கப்படுகிறது.

வழக்கத்தை விட இந்த ஆண்டு கோடைகாலம் முன்கூட்டியே தொடங்கியதும், சகாரா பாலைவனம், வடக்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து வரும் சூடான காற்றுமே தீவிர வெப்பத்திற்கு காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த வெப்பநிலை தாக்கமானது குறைய தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனிடையே ஸ்பெயினில் வெப்ப அலையால் கட்டுக்கடங்காத காட்டுத் தீ பரவியுள்ளது. கட்டலோனியாவுக்கு அருகில் ஏற்பட்ட காட்டுத்தீயில் 500 ஹெக்டேயர் பரப்பளவிலான காடுகள் அழிந்துள்ளன.

# வங்காளதேசத்தில் பெய்து வரும் கனமழைக்கு 41 பேர் உயிரிழப்பு

வங்காளதேசத்தில் கடந்த காலங்களில் இல்லாத அளவு தற்போது மழை கொட்டி வருகிறது. கடந்த 122 ஆண்டுகளில் கண்டிராத அளவுக்கு மிகவும் மோசமான வெள்ள பாதிப்பை அந்த நாடு எதிர்கொண்டுள்ளது. வங்காளதேசத்தின் வடகிழக்கு பகுதிகளில் கடந்த ஒரு வாரகாலமாக கனமழை கொட்டி வருகிறது. இதனால் அங்குள்ள பல்வேறு மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்து வருகின்றன.

கடந்த 122 ஆண்டுகளில் கண்டிராத அளவுக்கு மிகவும் மோசமான வெள்ள பாதிப்பை அந்நாடு எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக, சில்ஹெட் மற்றும் சுனம்கஞ்ச் ஆகிய இரு மாவட்டங்களும் மழை, வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இரு மாவட்டங்களிலும் ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீடுகளை இழந்த மக்கள் பள்ளிக்கூடங்களில் முகாம் அமைத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை, வெள்ளத்தால் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் வாகன போக்குவரத்து முடங்கி, மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கனமழைக்கு இதுவரை சிறுவர்கள் உள்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த கனமழையால் சுமார் பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# உலகம் முழுவதும் மனச்சோர்வு நோய்க்கு ஆளானோர் எண்ணிக்கை 25 வீதம் அதிகரிப்பு என அதிர்ச்சி தகவல்

கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மெல்ல, மெல்ல திரும்பி வருகிறார்கள். ஆனாலும் பெரும்பாலான மக்களிடம், எதிர்கால வாழ்க்கை குறித்த விரக்தி மனநிலையே காணப்படுகிறது. உலகை மிரட்டிய கொரோனா பெருந்தொற்று கடந்த 2019ம் ஆண்டு தொடங்கியது. தொட்டால் ஒட்டி கொள்ளும் என்று கூறப்பட்டதால் கொரோனா பரவலை தடுக்க உலகம் முழுவதும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நாடு தழுவிய ஊரடங்கு மட்டுமின்றி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டது. அலுவலகங்கள் மூடப்பட்டன. போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மக்கள் வெளியே வரவும், ஒன்று கூடவும் தடை விதிக்கப்பட்டது. கொரோனா கட்டுப்பாடுகளால் உலகம் முழுவதும் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்தது. இதனால் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளானார்கள். வாழ்க்கையை நடத்த முடியாமலும், பொருளாதாரத்திற்கு வழியின்றியும் தவித்தனர். பணம் மற்றும் உணவின்றி தவித்த மக்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார்கள். இப்போது கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மக்கள் இயல்பு



வாழ்க்கைக்கு மெல்ல, மெல்ல திரும்பி வருகிறார்கள். ஆனாலும் பெரும்பாலான மக்களிடம், எதிர்கால வாழ்க்கை குறித்த விரக்தி மனநிலையே காணப்படுகிறது. இதற்கு காரணம் என்ன? என்பது பற்றி உலக சுகாதார நிறுவனம் ஆய்வு நடத்தியது. அதன் தகவல்கள் பெரும் அதிர்ச்சியை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:–

உலகத்திற்கே பெரும் நெருக்கடியை அளித்த கொரோனா தனிமனிதன் வாழ்க்கையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. குடும்பத்தின் நிலை, குழந்தைகளின் எதிர்காலம் பற்றி எண்ணி, எண்ணி அவர்களில் பலரும் மனச்சோர்வுக்கு ஆளாகி உள்ளனர். உலகம் முழுவதும் இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் மனச்சோர்வுக்கு ஆளானோர் எண்ணிக்கை 2019ம் ஆண்டுக்கு பிறகு 25 சதவீதம் அதிகரித்து உள்ளது. இதில் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளானோர் பெண்கள் மற்றும் இளைஞர்கள். இவர்களுடன் ஏற்கனவே மன நல பிரச்சினைகளுக்கு ஆளானோர் முன்பு இருந்ததை விட கூடுதல் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். 2019ம் ஆண்டுக்கு பிறகு உலகம் முழுவதும் 100 கோடி பேர் மன நலப்பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர் என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. இதில் இளைஞர்கள், இளம்பெண்களே அதிகம். உலகில் 14 சதவீத இளையோர் மன சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. வரும் ஆண்டுகளில் இதன் பாதிப்பால் தற்கொலை சம்பவங்கள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் எச்சரித்து உள்ளது. தற்போது 100 இறப்புகள் நிகழ்ந்தால் அதில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டவராக இருக்கிறார். மேலும் தற்கொலை செய்பவர்களில் 58 சதவீதம் பேர் 50 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். குழந்தைகளுக்கு நடக்கும் பாலியல் துன்புறுத்தல், குடும்ப வன்முறைகள், கொடுமைகள், பழிவாங்குதல் போன்றவையே தற்கொலைக்கு தூண்டுவதாக அமைகிறது. உலக மக்கள் தொடர்ந்து மனச்சோர்வுக்கு ஆளானால் மோசமான பின் விளைவுகள் ஏற்படும். இதனை தடுக்க அனைத்து நாடுகளும் மக்களின் மனச்சோர்வை போக்க தேவையான நடவடிக்கைககளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. இது பற்றி உலக சுகாதார அமைப்பின் மனநல பிரிவு நிபுணர்கள் மார்க் வான் ஓமரான் கூறும்போது, மக்களிடையே தற்போது மனநலம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. இதனை பயன்படுத்தி உலக நாடுகள் மனநலம் குறித்த கூடுதல் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். இதற்காக உலக நாடுகள் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். நல்ல மனநலமே ஆரோக்கியமான வாழ்வுக்கு அடித்தளம் என்பதை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும், என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மத்திய அரசு திட்டங்களை பெயர் மாற்றம் செய்து தி.மு.க. அரசியல் செய்வதாக அண்ணாமலை புகார்



இந்திய மத்திய அரசின் திட்டங்களை தமிழகத்தில் தி.மு.க. பெயர் மாற்றம் செய்து, அரசியல் செய்து வருகிறது என பொள்ளாச்சியில் நடைபெற்ற பா.ஜ.க. மாநாட்டில் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பொள்ளாச்சியில் மத்திய பா.ஜ.க. அரசின் 8 ஆண்டுகால சாதனை விளக்க மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை, மத்திய பா.ஜ.க. 8 ஆண்டு கால ஆட்சியில் மக்களும், பெண் சமுதாயத்தினரும் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். தி.மு.க. ஆட்சியின் ஓர் ஆண்டில் மக்களுக்கு சலிப்புத் தட்டி விட்டது. தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு நாள்தோறும் மணல் கடத்தல் அதிகரித்து வருகிறது. இதை காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது, என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மத்திய பா.ஜ.க. அரசின் திட்டங்களை தமிழகத்தில் தி.மு.க. பெயர் மாற்றம் செய்து அரசியல் செய்து வருகிறது. ஆனைமலையாறு நல்லாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் பொள்ளாச்சியை தனி மாவட்டமாக கொண்டு வரவும் பா.ஜ.க. பாடுபடும். 2024 நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து 25 பா.ஜ.க. எம்.பிக்கள் டெல்லி செல்வார்கள், எனவும் அவர் தெரிவித்தார்.

## அ.தி.மு.க. பொதுக்குழுவுக்கு பொலிஸ் பாதுகாப்பு நீதிமன்றத்தில் கோரிக்கை மனுத் தாக்கலானது



அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்திற்கு பாதுகாப்பு அளிக்க பொலிஸாருக்கு உத்தரவிடக்கோரி அ.தி.மு.க. சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான பி.பெஞ்சமின் தாக்கல் செய்துள்ள மனுவில், வரும் 23 ஆம் திகதி வானகரத்தில் நடை பெறவுள்ள அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் என 2,500 இற்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இதனால், இந்தக் கூட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு அவசியம் எனவும் போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்குழுவுக்கு பாதுகாப்பு அளிக்கக்கோரி ஜூன் 7 ஆம் திகதி தமிழக டி.ஜி.பி., ஆவடி மாநகர காவல் ஆணையர், திருவேற்காடு காவல் ஆய்வாளர் ஆகியோரிடம் விண்ணப்பித்ததாகவும், அதன் மீது எந்த முடிவும் எடுக்காததால் மீண்டும் ஜூன் 15 ஆம் திகதி நினைவூட்டல் கடிதம் அனுப்பிய பின்னரும் விண்ணபத்தின் மீது முடிவெடுக்காமல் காவல்துறை காலம் தாழ்த்துவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே ஜூன் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறு தமிழக டி.ஜி.பி., ஆவடி காவல் ஆணையர் மற்றும் திருவேற்காடு காவல் ஆய்வாளருக்கு உத்தரவிட வேண்டுமென அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென நீதிபதி என்.சதீஷ்குமாரிடம் முறையிடப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி இந்த மனு வரும் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்திருக்கிறார்.




## கழகத்தை தலைமையேற்று வழிநடத்த வாருங்கள்! மதுரையில் ஓ.பி.எஸ். ஆதரவு சுவரொட்டிகள்

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை தேவை என்ற கோரிக்கை எழுந்துள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் தனித் தனியாக தங்களது ஆதரவாளர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

அ.தி.மு.கவின் தலைமைப் பொறுப்பு யாருக்கு என்பதில் இ.பி.எஸ். – ஓ.பி.எஸ். இடையே மீண்டும் கடும் போட்டி நிலவி வரும் நிலையில், கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வத்திற்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அவற்றில், அ.தி.மு.கவின் உண்மைத் தொண்டர்கள் என்ற பெயரோடு, ஓ.பன்னீர் செல்வத்தை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆசீர்வதிக்கின்றமை போல படங்களை அச்சிட்டு, ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட தொண்டர்களின் பாதுகாவலரே, ஒற்றைத் தலைமை ஏற்று கழகத்தை வழிநடத்த வாருங்கள்!, என்ற வாசகங்களோடு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கட்சியின் நிர்வாகிகள் சிலர் இ.பி.எஸ். இற்கு ஆதரவாக ஏற்கனவே சுவரொட்டிகளை ஒட்டிய நிலையில், அ.தி.மு.க. உண்மை தொண்டர்கள் என்ற பெயரில் ஓ.பன்னீர் செல்வத்திற்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## முஸ்லிம் பெண்கள் 16 வயதில் மணம் புரியலாம் பஞ்சாப் – ஹரியானா உயர் நீதிமன்றம் தீர்ப்பு




முஸ்லிம் தம்பதியரின் மைனர் திருமணத்தை அங்கீகரித்த பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் 16 வயதில் முஸ்லிம் பெண்கள் திருமணம் செய்து கொள்ளலாம், என்று தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் தங்கள் பெற்றோரிடம் இருந்து பாதுகாப்பு வழங்கக்கோரி, முஸ்லிம் இளம் தம்பதியர் மனுத்தாக்கல் செய்தனர். மணமகனுக்கு 21 வயது நிறைவு பெற்ற போதிலும், மணப் பெண்ணுக்கு 16 வயது மட்டுமே ஆகியிருந்ததால் இவ்வழக்கு பலரதும் அவதானத்துக்கு உள்ளானது. மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி ஜஸ்ஜித் சிங் பேடியின் ஒற்றை நீதிபதி அமர்வு, தம்பதியர் மற்றும் அவர்களது பெற்றோர் ஆகிய இருவரது வாதங்களையும் கேட்டது. பெற்றோருக்கு இந்த திருமணத்தில் துளியும் விருப்பமில்லை என்றும் மணப்பெண் 18 வயதை எட்டாத மைனர் என்றும் வாதிடப்பட்டது.

இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி ஜஸ்ஜித் சிங், முஸ்லிம் தம்பதியரின் மைனர் திருமணம் செல்லும் என்று தீர்ப்பளித்தார். மனுதாரர்கள் தங்கள் குடும்ப உறுப்பி னர்களின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொண்டதால், இந்திய அரசியலமைப்பில் எதிர்பார்க்கப்பட்ட அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க முடியாது, என்று நீதிபதி ஜஸ்ஜித் சிங் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய ரியா விதியை மேற்கோள் காட்டிய நீதிபதி, முஸ்லிம் பெண்ணின் திருமணம் முஸ்லிம் தனிநபர் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது என்றார். சர் டினா பர்துன்ஜி முல்லாவின் 'முஹம்மதின் சட்டத்தின் கோட்பாடுகள்' என்ற புத்தகத்தின் பிரிவு 195 இன் படி, மணப்பெண் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், அவர் விரும்பும் நபருடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியுடையவர். மணமகன் 21 வயதுக்கு மேற்பட்டவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் இருவரும் முஸ்லிம் தனிநபர் சட்டத்தின்படி திருமண வயதுடையவர் களே, என்று நீதிபதி ஜஸ்ஜித் சிங் தெரிவித்திருக்கிறார்.

மனுதாரர்களின் அச்சத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதால், நீதிமன்றம் தனது கண்களை மூடிக்கொள்ள முடியாது. தம்பதியருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கவும் சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் பதன்கோட் காவல் கண்காளிப்பாளருக்கு உத்தரவிடுகிறேன், என்று தனது தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.



## புதிதாக 200 விமானங்களை வாங்க எயார் இந்தியா நிறுவனம் திட்டம்

*எயார் இந்தியா நிறுவனம் புதிதாக 200 விமானங்களை வாங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய அரசு வசம் இருந்த எயார் இந்தியா நிறுவனத்தை டாடா நிறுவனம் வாங்கி இயக்கி வருகிறது.*

*விமான சேவையை சீரமைக்கும் வகையில் 200 புதிய விமானங்களை வாங்க டாடா திட்டமிட்டுள்ளது. இதற்காக போயிங், எயார் பஸ் நிறுவனங்களுடன் பேச்சு நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எயார் இந்தியாவில் கடந்த 16 ஆண்டுகளாக புதிதாக ஒரு விமானம் கூட வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

# பொருளாதார நெருக்கடியை தேர்தலால் தீர்க்க முடியாதாம்

## திருமலையில் அமைச்சர் நிமால் விளக்கம்

(அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தேர்தல் ஒன்றின் மூலம் மீளக் கட்டியெழுப்ப முடியாது என விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் ஸ்திரத்தன்மை கொண்ட அரசாங்கம் எனவும் ஜே.வி.பி. மற்றும் சஜித் மூலம் நாட்டிற்கு டொலர் கொண்டுவர முடியாது என அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை இயற்கை துறைமுகத்தை பார்வையிட நேற்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர், அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் –

இயற்கை துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தை உலகின் தலைசிறந்த வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக இலாபமீட்டாமல் இருந்த திருகோணமலைத் துறைமுகம் கடந்த 6 மாதங்களில் சற்று இலாபம் தரக்கூடிய துறைமுகமாக மாற்றப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தை மேலும் விஸ்தரிப்பது, திருகோணமலை துறைமுகத்தை அண்டிய ஆழ் கடலை அண்டிய கரையோரத்தில் புதிய ஒரு துறைமுகத்தை அமைப்பது ஆகியவை தொடர்பில் ஆராய்வதற்காக இன்றையதினம் (நேற்று) துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரசாந்த ஜெயம்மான தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருப்பதற்கு காரணம் நாட்டில் உள்ளது ஸ்திரமான அரசாங்கம் இல்லாமை என்று கூறப்படுவதே. – என அவர் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேர்தல் ஒன்றுக்கு தயாராக உள்ளீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு –

தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழ்நிலை பொருளாதார நெருக்கடிக்கு தேர்தல் ஒன்றின் மூலம் தீர்வு கிட்டாது – என அமைச்சர் பதிலளித்தார்.

நாளை பிரதமர் மாற்றப்படுவதால் அரசாங்கம் மாற்றப்படுவதாலும் நாட்டில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும் அதனால் நாட்டில் டொலர் வந்து கொட்ட போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

மேலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் டொலர் கொண்டுவர முடியாது. சஜித் மூலமும் டொலர் கொண்டு வர முடியாது. அவ்வாறு அவர்கள் மூலம் டொலர் கொண்டு வர முடியும் என்றால் அவர்கள் இந்த அரசாங்கத்தை பாரமெடுத்து முன்னெடுத்திருக்க முடியும். எனவே வீழ்த்தப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தைப் படிப்படியாகவே கட்டியெழுப்ப முடியும். அதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துச் செல்கின்றோம். கப்பல், விமானசேவை,விவசாயம் மற்றும் ஏற்றுமதி போன்றவற்றை விரிவுபடுத்துவதன் மூலமாக மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். – எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்

## ‘என் இனிய பட்டாம் பூச்சிக்கு’ மட்டக்களப்பில் நூல் வெளியீடு

(க.கிருபாகரன்)

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும் பௌர்ணமி கலை இலக்கியத் தொடரின் 43 ஆவது நிகழ்வாக வி.மைக்கல் கொலினின் ‘என் இனிய பட்டாம் பூச்சிக்கு’ கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை(26 ஆம் திகதி) மாலை 3.45 மணிக்கு மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல்வெளியீட்டுநிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனும், கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கமும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியனும், கௌரவ விருந்தினர்களாக பயணியர் வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் ஈ.ஸ்ரீநாத், கிழக்குப் பல்கலைக்கழக ஆரம்ப பராமரிப்பு பீட தலைவர் வைத்தியர் கே.அருளானந்தம், கிழக்குப் பல்கலைக்கழக வைத்தியர் எஸ். சிவச்செல்வன், திருகோணமலை மாவட்ட மக்கள்வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.என்.மோகனதாஸ், மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கி முன்னாள் முகாமையாளர் எஸ்.வி.சுவேந்திரன் மற்றும் தொழிலதிபர்களான எஸ்.எல்.எம்.ஆரிப், எஸ். சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் பெற்றுக் கொள்வார்.

இந்நூலுக்கான வெளியீட்டுரையை மட்டக்களப்பு கொத்தியாபுலை கலைவாணி தமிழ் மகாவித்தியாலய அதிபர் ச.மணிசேகரனும், நூல் நயவுரையினை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கலைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் க.மோகனதாசனும், ஏற்புரையினை மகுடம் வி.மைக்கல் கொலினும் நிகழ்த்தவுள்ளனர்.

## பொறித்ததை விட அதிக விலைக்கு அங்கர் விற்ற கடை மீது நடவடிக்கை




பழைய விலைகளான 540 மற்றும் 790 ரூபா பொறிக்கப்பட்ட அங்கர் பால்மாக்களை பதுக்கி வைத்திருந்த வர்த்தக நிலையமொன்றை மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் நேற்று சுற்றிவளைத்தனர்.

பழைய விலை பால்மா பக்கெட்டுகள் புதிய விலைகள் பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சாதாத் தலைமையிலான நுகர்வோர் அலுவல்கள் அதிகாரிகள் அந்த வர்த்தக நிலையத்தைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட அங்கர் பால்மாக்கள் பொறிக்கப்பட்ட விலைக்கு அதிகாரிகள் முன்னிலையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விளக்கு விழுந்து தீப்பிடித்ததில் குடும்பப்பெண் பரிதாப மரணம்

(கல்லடி நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன்கோயில் வீதி மயிலெம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண் மண்எண்ணை விளக்கு நிலத்தில் விழுந்து தீப்பிடித்ததில் பலியான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முருகன் கோயில் வீதி, மயிலெம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான கிருஷ்ணபிள்ளை வள்ளிப்பிள்ளை என்பவரே பலியானவராவார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்வெட்டுக் காரணத்தினால் வீட்டில் மண்ணெண்ணை விளக்கை இந்தப் பெண் சிறுநீர் கழிப்பதற்காக வெளியில் எடுத்துச்செல்லும் போது விளக்கு தவறுதலாக நிலத்தில் விழுந்து தீப்பிடித்து அவர் எரிகாயங்களுக்கு உள்ளானார். உடனடியாக அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது அவர் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பணித்தார்.

# நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் சர்வதேச தரப்புகளுடன் இலங்கை செயற்படும்

## ஜெனிவாப் பயணத்தில் உறுதியளித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 50 ஆவது அமர்வின் பக்க அம்சமாக, மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, கொரியக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளை இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சந்தித்தார்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையாருடனான சந்திப்பின் போது, மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புடன் இலங்கை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுவதாக உயர்ஸ்தானிகருக்கு அவர் உறுதியளித்தார். காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்கு பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்ளூர் பொறிமுறைகளினால் நாட்டில் எட்டப்பட்டுள்ள பெறுபேறுகளையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விரிவாக விவரித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக உயர்ஸ்தானிகருக்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பு இன்னும் அப்படியே இருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

தற்போதைய அமர்வின் ஆரம்பத்தில் உயர்ஸ்தானிகர் அறிவித்தமைக்கு அமைய, அவரது சேவையின் நிறைவான ஓய்விற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சென் சூ உடனான இருதரப்பு சந்திப்பின் போது, இலங்கைக்கு பல ஆண்டுகளாக அளித்து வரும் ஆதரவிற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சீனாவுக்கு நன்றி தெரிவித்தார். நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், குறிப்பாக வெளிநாட்டு இருப்புக்கள் மற்றும் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அவற்றின் தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய பேராசிரியர் பீரிஸ், கொவிட்-19 ஐ எதிர்த்துப் போராடுவதற்காக சீனா அனுப்பிய கணிசமான அளவிலான உணவு, மருந்துப் பொருள்கள் மற்றும் தடுப்பூசிகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட நட்புறவுகள் மற்றும் எதிர்காலத்தில் உறவை மேலும் வலுப்படுத்தும் எதிர்பார்ப்பு குறித்தும் குறிப்பிடப்பட்டது.

பேராசிரியர் பீரிஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் அமண்டா கோரேலி ஆகியோர் ஆஸ்திரேலியாவின் உள்விவகாரங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு அமைச்சர் திருமதி கிளாரி ஓ நீலின் இலங்கைக்கான விஜயம் குறித்து கலந்துரையாடினர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சரைச் சந்திப்பதற்கு ஆவலுடன் காத்திருப்பதை சுட்டிக்காட்டிய பேராசிரியர் பீரிஸ், இலங்கை மனிதாபிமானப் பேரிடராகக் கருதும் சட்டவிரோத இடம்பெயர்வு விவகாரம் தொடர்பாக தொடர்ச்சியான ஆதரவை இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஆஸ்திரேலியாவிற்கு நல்குவார் என உறுதியளித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் திரு. ஜெகன் சப்பகைனைச் சந்தித்த அமைச்சர் பீரிஸ், முன்னுரிமையின் அடிப்படையில் இலங்கைக்கு மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தரக் கண்காணிப்பாளரான தூதுவர் லோட்டே நுட்சனுடனான சந்திப்பில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட



பொருளாதார இராஜதந்திரம் தொடர்பான பிரச்சினைகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வலியுறுத்தினார்.

அரபு லீக்கின் ஒருங்கிணைப்பாளரும் ஜோர்தானின் நிரந்தரப் பிரதிநிதியுமான தூதுவர் வாலிட் காலிட் ஒபேதத், கொரியக் குடியரசின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் டேஹோ லீ, நெதர்லாந்தின் தூதரகப் பொறுப்பாளர் நடாலி ஒலிஜ்ஸ்லேகர் மற்றும் ஜேர்மனியின் பிரதி நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் ஹான்ஸ்-பீட்டர் ஜுகல் ஆகியோருடனும் டன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இருதரப்பு சந்திப்புக்களில் ஈடுபட்டார்.

# குறைந்த ஊழியர்களுடன் அரச அலுவலகப் பணிகள்

அரசாங்க அலுவலகங்களில் இன்று (திங்கட்கிழமை) முதல் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களைக் கொண்டு சேவைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் 2 வாரங்களுக்கு இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களை சேவைக்கு அழைக்கும் போது, சுழற்சி முறை மற்றும் வேறு ஏதேனும் பொறிமுறைமையை பின்பற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாய சேவைக்கு அழைக்கப்படுகின்ற நாள்களில் சேவைக்கு சமுகமளிக்காத ஊழியர்களது பணிநாள், தனிப்பட்ட விடுமுறையில் கழிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அனைத்து ஊழியர்களும் இணையவழியில் தொழிலாற்றுவதற்கு எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வவுனியாப் பாடசாலைகளில் மாணவர்கள் வருகை குறைவு

வவுனியாவில் உள்ள நகர்ப்புற பாடசாலைகளில் மாணவர்களின் வருகை வெகுவாகக் குறைந்துள்ளது. எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைத்து வருவதில் பெற்றோருக்கும், பொது போக்குவரத்து சேவையினருக்கும் ஏற்பட்ட இடையூறின் காரணமாகவே மாணவர்களின் வரவு குறைந்துள்ளது. இதேவேளை ஆசிரியர்களின் வரவும் குறைந்து காணப்பட்ட நிலையில், வினாத்தாள் திருத்தும் பணிகளுக்குச் செல்லும் ஆசிரியர்களும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடமைக்கு செல்லும் அரச ஊழியர்களும் பொதுப்போக்குவரத்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழலும் ஏற்பட்டுள்ளது.

# கொக்கிளாயில் இருந்து புல்மோட்டைக்கு இயந்திர படகில் கதிர்காம யாத்திரைக் குழு





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் கதிர்காம பாதயாத்திரை குழுவினர் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

நேற்று மாலை கொக்கிளாயில் இருந்து இயந்திரப் படகுகள் மூலம் அவர்கள் புல்மோட்டை வந்திருக்கின்றார்கள். கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை இரண்டாவது வாரமாக சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கதிர்காமப் பாதயாத்திரை பேரவையின் தலைவர் எஸ்.ஜெகராஜா தலைமையில் இந்த குழுவினர் தமது யாத்திரையை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

மொத்தமாக எண்பத்தி ஏழு அடியார்கள் இந்த பாதயாத்திரை குழுவில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

தினம் கொக்குளாய் முருகன் ஆலய நிர்வாகத்தினர் இன்றைய எரிபொருள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த இயந்திரப் படகுகளை கடற்படை உதவியோடு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2022இல் வெளியிடப்பெற்றது.